©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 36.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 39] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 28, 2022
புரட்டாசி 11, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**அறிவிக்கைகள்**

**தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 214, நாள் 11 ஏப்ரல் 22–ல் ஆங்கிலத்தில் வெளியான அறிவிக்கையின் தமிழ் அறிவிக்கை**

ஊதியச்சட்டத் தொகுப்பு (தமிழ்நாடு) விதிகள், 2022.

*[தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (H2) துறையின் 11.04.2022 ஆம் நாளிட்ட 36 ஆம் (நிலை) எண் அரசாணை, பங்குனி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2053.]*

*(கடித எண். 7234/எச்2/2022–4, நாள் 14.09.2022)*

No. SRO A–8(a)/2022.

2019 ஆம் ஆண்டு ஊதியச் சட்டத் தொகுப்பின் (மத்தியச் சட்டம் 29/2019) 67 ஆம் பிரிவு, 1897 ஆம் ஆண்டு பொது பகுதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1897) 24 ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், நேர்விற்கேற்ப மேற்சொன்ன 2019 ஆம் ஆண்டு ஊதியங்கள் சட்டத்தொகுப்பின் 69 ஆம் பிரிவு வாயிலாக ரத்து செய்யப்பட்ட 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்திலும் (மத்திய சட்டம் 4/1936) மற்றும் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டத்திலும் (மத்தியசட்டம்11/1948) வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டும் தமிழ்நாட்டு ஆளுநரால் இயற்றப்பட்ட, (i) தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகள், (ii) தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் **(கோரப்படாத தொகைகள்)** விதிகள், மற்றும் (iii) 1953 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகள் ஆகியவற்றை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும் அவ்வாறு இரத்து செய்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படுவதிலிருந்து விட்டுவிடப்பட்டவை நீங்கலாக, தமிழ்நாடு அரசு செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவு விதிகள், இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைத்து நபர்களின் தகவலுக்காக, மேற்சொன்ன 67 ஆம் பிரிவைச் சேர்ந்த (1)–உட்பிரிவில் கோரியுள்ளவாறாக, இதனால் அறிவிக்கையிடப்படுகிறது. இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள **தமிழ்நாடு அரசிதழின்** நகல்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்தப் பின்னர், மேற்சொன்ன வரைவு விதிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என இதனால் அறிவிக்கப்படுகிறது.

மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை சென்னை – 600 006, டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக 'அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009' என்ற முகவரிக்கு அல்லது com.tnlabour@nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படலாம். அவ்வாறு அனுப்பப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் பின்வரும் விவரங்களை நெடும்பத்திகளில் அமையப்பெற்ற முறையான படிவத்தில் (i) நபர் அல்லது அமைப்புகளின் பெயர் மற்றும் முகவரி, (ii) திருத்தியமைக்க கருதப்பட்ட விதி அல்லது துணைவிதி குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் (iii) மாற்றியமைக்க கருதப்பட்டுள்ள திருத்தப்பட்ட விதி அல்லது துணைவிதிகள் மற்றும் அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

மேற்சொன்ன வரைவு விதிகள் குறித்த நேர்வில், மேற்குறிப்பிட்ட காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் யாதொருநபரிடமிருந்து பெறப்படும் மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும்.

**ஊதியச் சட்டத் தொகுப்பு (தமிழ்நாடு) விதிகள், 2022**

**அத்தியாயம் – I**

**1. குறுகிய தலைப்பு, வரம்பெல்லை, நடைமுறைக்குவரல்–** (1) இந்த விதிகள் ஊதிய சட்டத்தொகுப்பு (தமிழ்நாடு) விதிகள், 2022 என்று அழைக்கப்படும்.

(2) அவை தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் பொருந்தும்.

(3) அவை அரசிதழில் இறுதியாக வெளியான நாளுக்கு பிறகு, 2019 ஆம் ஆண்டு ஊதிய சட்டத் தொகுப்பு (மத்தியச்சட்டம் 29/ 2019) செயலுக்கு வரும் நாளில் நடைமுறைக்கு வரும்.

**2. பொருள் விளக்கங்கள்:–** இவ்விதிகளில், சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி, மற்றபடி,

(a) ''அதிகாரி'' என்பவர் தமிழ்நாடு அரசால் பிரிவு 45 உட்பிரிவு (1) –இன் வாயிலாக நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி ஆவார்;

(b) ''மேல்முறையீட்டு அதிகாரி'' என்பவர் பிரிவு 49 உட்பிரிவு (1)–இன் வாயிலாக அரசால் நியமிக்கப்பட்ட ஒரு மேல்முறையீட்டு அதிகாரி ஆவார்;

(c) ''மேல்முறையீடு'' என்பது பிரிவு 49 உட்பிரிவு (1) –இன் கீழ் அளிக்கப்படும் ஒரு மேல்முறையீடு என பொருள்படும்;

(d) ''வாரியம்'' என்பது அரசால் பிரிவு 42 உட்பிரிவு (4) –இன் வாயிலாக உருவாக்கப்பட்ட ஒரு மாநில ஆலோசனை வாரியம் என பொருள்படும் ;

(e) ''தலைவர்'' என்பது வாரியத்தின் தலைவர் அல்லது வாரியத்தால் ஒரு குழுவிற்கு அல்லது ஒரு துணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட தலைவர் என்பதாகும்;

(f) ''சட்டத்தொகுப்பு'' என்பது 2019 ஆம் ஆண்டு ஊதிய சட்டத் தொகுப்பு, (மத்தியச் சட்டம் 29 / 2019) என பொருள்படும்;

(g) ''குழு'' என்பது வாரியத்தால் 42–ஆம் பிரிவைச் சேர்ந்த (5) –உட்பிரிவின் வாயிலாக உருவாக்கப்பட்ட ஒரு குழு என பொருள்படும் ;

(h) ''நாள்'' என்பது நள்ளிரவு துவங்கி 24 மணி நேர காலமாகும்;

(i) ''படிவம்'' என்பது இவ்விதிகளில் இணைக்கப்பட்டுள்ள படிவம் ஆகும்;

(j) ''அரசு'' என்பது தமிழ்நாடு அரசாகும்;

(k) ''உயர் திறன்மிகு தொழில்'' என்பது ஒரு தொழிலின் செயலாக்கத்தில், ஒரு குறிப்பிட்ட அளவிலான முழு நிறைவும் செரிவான தொழில்நுட்ப அல்லது தொழில்முறை பயிற்சியின் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு நடைமுறை தொழில்முறை பட்டறிவு வாயிலாக பெறப்பட்ட தேவைப்படும் திறனும் என பொருள்படும். அத்தொழிலை செயல்படுத்துவதில் சம்பந்தப்பட்டுள்ள தீர்வு அல்லது முடிவிற்கு ஒரு பணியாளரின் முழு பொறுப்பும் தேவைப்படுகிறது;

(l) ''ஆய்வாளர் மற்றும் உதவுபவர்'' என்பவர் அரசால் பிரிவு 51 உட்பிரிவு (1)–இன்கீழ் அறிவிக்கைவாயிலாக நியமிக்கப்பட்ட ஒரு நபர் ஆவார்.

(m) ''உறுப்பினர்'' என்பவர் ஒரு வாரியத்தின் உறுப்பினர் ஆவார் அதன் தலைவரும் இதில் அடங்குவார்;

(n) ''பெருநகர பகுதி'' என்பது தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 5/1920) அல்லது அந்தந்த மாநகராட்சி சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதியாகும்;

(o) ''பெருநகரம் அல்லாத பகுதி'' தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 5/1920) அல்லது அந்தந்த மாநகராட்சி சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட, 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதியாகும்;

(p) ''மக்கள்தொகை'' என்பது கடைசியாக எடுக்கப்பட்டு வெளியிடப்பட்ட மக்கள்தொகை எண்ணிக்கை ஆகும்;

(q) ''பதிவுபெற்ற தொழிற்சங்கம்'' என்பது 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1926) கீழ் அல்லது 2020 ஆம் ஆண்டு தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பின் (மத்தியச் சட்டம் 35/2020) இன் கீழ் பதிவுப்பெற்ற ஒரு தொழிற்சங்கம் ஆகும்;

(r) ''ஊரகப் பகுதி'' என்பது 'பெருநகர பகுதி' அல்லது 'பெருநகரம் அல்லாத பகுதி' இவ்விரண்டும் அல்லாத ஒரு பகுதியாகும்;

(s) ''அட்டவணை'' என்பது இவ்விதிகளின் அட்டவணையாகும்;

(t) ''பிரிவு'' என்பது சட்டத்தொகுப்பின் ஒரு பிரிவாகும்;

(u) ''ஓரளவு பயிற்சி பெற்ற தொழில்'' என்பது பயிற்சி பெற்ற தொழிலாளர் ஒருவரின் கண்காணிப்பில் அல்லது வழிகாட்டுதலின் பேரில் தொழில் அனுபவம் வாயிலாக பெற்ற திறனை பயன்படுத்தி மேற்கொள்ளும் தொழில் என பொருள்படும். பயிற்சி பெறாத தொழிலை மேற்பார்வையிடுவதும் இதில் அடங்கும்.

(v) ''பயிற்சி பெற்ற தொழில்'' என்பது தொழில் அனுபவம் வாயிலாக அல்லது தொழில்நுட்பம் அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தில் தொழில் பழகுநர் பயிற்சி வாயிலாக பெற்ற திறனும் பட்டறிவும் கொண்டு சுயமுயற்சியுடன் முனைப்பான முடிவுகளை கொண்டு மேற்கொள்ளப்படும் ஒரு தொழில் என பொருள்படும்.

(w) ''துணைக்குழு'' என்பது வாரியத்தால் பிரிவு 42 உட்பிரிவு (5)இன் வாயிலாக அமைக்கப்பட்டஒரு துணைக்குழுவாகும்;

(x) ''தொழில்நுட்பக்குழு'' என்பது திறன் வகைபடுத்தலுக்காக அரசிற்கு அறிவுரை வழங்க அரசினால் உருவாக்கப்பட்ட ஒரு குழுவாகும்;

(y) ''பயிற்சி தேவையற்ற தொழில்'' என்பது வெறுமனே இயக்குவதில் அனுபவம் பெற்றிருந்து மேற்கொண்டும் திறன்கள் தேவையிராத ஒரு தொழில் ஆகும்

(z) இவ்விதிகளில் பயன்படுத்தப்பட்டு பொருள் விளக்கம் அளிக்கப்படாத ஏனைய அனைத்து சொற்களும் சொற்றொடர்களும் சட்டத்தொகுப்பில் முறையே அவற்றுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொருள் விளக்கத்தையே கொண்டிருக்கும்.

## அத்தியாயம் II

## குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள்

3. குறைந்தபட்ச **ஊதிய விகிதங்களை கணக்கிடும் முறை:–** (1) கீழ்க்காணும் அளவு கோல்களை கருத்தில் கொண்டு பிரிவு (5) உட்பிரிவு (6)–இன் நோக்கத்திற்காக குறைந்தளவு ஊதியமானது 'நாள்' அடிப்படையில் நிர்ணயிக்கப்படும், அவையாவன:–

(i) வருமானம் ஈட்டும் தொழிலாளியுடன் அவரது வாழ்க்கை துணை மற்றும் இரு குழந்தைகளையும் சேர்த்து அடங்கிய ஒரு நிர்ணயிக்கப்பட்ட குடும்பம் மூன்று பெரியவரின் நுகர்வு அளவைக்கு சமமானதாகும்;

(ii) ஒரு நாளின் ஒரு நுகர்வு அளவையானது 2700 நிகர கலோரி உணவு எடுத்துக்கொள்ளுதல்;

(iii) ஒரு நிர்ணயிக்கப்பட்ட தொழிலாளி குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு 66 மீட்டர்துணி;

(iv) உணவு மற்றும் துணிகளுக்கான செலவில் 10 விழுக்காடு வீட்டு வாடகை செலவினமாக அமையும்;

(v) எரி பொருள், மின்சாரம் மற்றும் இதர வகையினங்களுக்கான செலவினம் குறைந்தபட்ச ஊதியத்தில் 20 விழுக்காடாக அமையும்; மற்றும்

(vi) குழந்தைகளுக்கான கல்வி செலவினம், மருத்துவத் தேவை, பொழுதுபோக்கு மற்றும் எதிர்பாரா செலவினங்கள் குறைந்தபட்ச ஊதியத்தில் 25 விழுக்காடாக அமையும்;

(2) ஒரு நாளுக்கான ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும் பொழுது, ஒரு மணி நேரத்தின் ஊதிய விகிதம் நிர்ணயிப்பதற்கு அத்தொகை எட்டால் வகுக்கப்படும். ஒரு மாதத்தின் ஊதிய விகிதம் நிர்ணயிப்பதற்கு அத்தொகை இருபத்து ஆறால் பெருக்கல் செய்யப்படும். அவ்வாறு மேற்படி வகுத்தலின் போது அல்லது பெருக்கலின் போது ஒரு பாதி அல்லது அதற்கு மேலாக வரும் தசம எண்களை அடுத்த முழு எண்ணாக மாற்ற வேண்டும் ஒரு பாதிக்கு குறைவான தசம எண்களை கணக்கில் கொள்ள வேண்டியதில்லை.

**4. குறைந்தபட்ச ஊதிய வீதங்களை நிர்ணயிப்பதற்கான நியமங்கள்:–** (1) பிரிவு 6 இன் கீழ் குறைந்தபட்ச ஊதிய விகிதத்தை நிர்ணயிக்கும் பொழுது, அரசு சம்பந்தப்பட்ட புவிசார் பகுதியை, பெருநகரப் பகுதி, பெருநகரம் அல்லாத பகுதி மற்றும் ஊரக பகுதி என மூன்று வகைகளாகப் பிரிக்க வேண்டும்.

(2) திறன் வகைப்பாடு தொடர்பாக அரசிற்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒரு தொழில்நுட்பக் குழுவை அரசு அமைக்க வேண்டும். அது கீழ்க்காணும் உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும்;

(i) தொழிலாளர் ஆணையர் – தலைவர்;

(ii) தொழிலாளர் கூடுதல் ஆணையர் (சமரசம்) – உறுப்பினர்;

(iii) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் – உறுப்பினர்;

(iv) திட்ட இயக்குநர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் – உறுப்பினர்;

(v) இணை இயக்குநர் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை– உறுப்பினர்; மற்றும்

(vi) தொழிலாளர் இணை ஆணையர் (குறைந்தபட்ச ஊதியங்கள்) – உறுப்பினர் செயலர்.

(3) துணை விதி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பக் குழுவின் ஆலோசனையின் பேரில், அட்டவணை (A)–ல் குறிப்பிட்டுள்ள தொழிலினங்களின் வகைப்பாடுகளை மாற்றியமைத்தல், நீக்குதல் அல்லது ஏதேனும் புதிய இனங்களை சேர்த்தல் வாயிலாக அரசு, தொழிலாளர்கள் செய்யும் தொழில்களை பயிற்சி பெறாத, ஓரளவு பயிற்சிப் பெற்ற, பயிற்சிப் பெற்ற, உயரளவு பயிற்சிப்பெற்ற தொழில் என்று நான்கு வகைகளாக வகைப்படுத்தும்.

(4) துணை விதி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பக் குழு, துணை விதி (3) இன் கீழ் அரசிற்கு ஆலோசனை வழங்கும் பொழுது, தொழிலினங்களை அடையாளங் காண்பதற்கு அப்போதைக்கு வடிவமைக்கப்பட்டுள்ள தேசியத் தொழில் வகைப்பாடு அல்லது தேசிய திறன் தகுதி கட்டமைப்பு அல்லது அதேபோன்ற பிற கட்டமைப்புகளை இயன்ற அளவிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(5) தொழில்நுட்பக் குழு அரசுக்கு ஆலோசனை வழங்கும்போது, சாதாரணமாக பொறுத்துக் கொள்வதற்குக் கடினமான தட்பவெப்பநிலை அல்லது ஈரப்பதம், அபாயகரமான தொழில்கள் அல்லது செயல்முறைகள் அல்லது நிலத்தடிப் பணிகள் போன்ற பணிகளில் உள்ள கடினத்தன்மையை கருத்தில் கொள்ள வேண்டும்.

**5. வாழ்க்கைச் செலவுப் படியினை திருத்தியமைப்பதற்கான கால இடைவெளி:–** குறைந்தபட்ச ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கத்தக்க அகவிலைப்படியை திருத்தியமைப்பதற்கு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் 1–ஆம் நாளிற்கு முன்னரும், அதன் பின்னர் அக்டோபர் 1 ஆம் நாளிற்கு முன்னரும், வாழ்க்கைச் செலவுப் படியையும், சலுகை விலையில் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களுக்கான சலுகையின் பண மதிப்பினையும் கணக்கிடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த விதிகளில் யாது சொல்லப்பட்டிருப்பினும், குறைந்தபட்ச ஊதிய வீதங்களை நிர்ணயித்து அல்லது திருத்தியமைத்து 8ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக, இந்த விதிக்கூறுகள் அல்லது அப்போது செயலிலுள்ள யாதொருசட்டம் அல்லது தீர்வம் அல்லது ஒப்பந்தத்தின்கீழ் செலுத்தத்தக்க வாழ்க்கைச் செலவுப்படியானது, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட வீதத்திற்கு அதிகமாக இருப்பினும், அத்தகைய உயர்வீதத்தில் வாழ்க்கைச் செலவுப்படியையே பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**6. ஒரு வழக்கமான பணி நாளுக்கான பணி நேர அளவு:–** (1) 13ஆம் பிரிவைச் சேர்ந்த (1)ஆம் உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் ஒரு வழக்கமான பணி நாளானது, எட்டு மணி நேரப் பணியையும் மற்றும் மொத்தமாக ஒரு மணி நேரத்திற்கு மிகாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஓய்வு இடைவேளைகளையும் கொண்டிருக்கும்.

(2) பணியாளரின் மேற்சொன்ன பணி நாளானது, யாதொருநாளிலும் ஓய்வு இடைவேளைகள் எவையேனும் இருப்பின் அவற்றையும் சேர்த்து, பன்னிரெண்டு மணி நேரத்திற்கு மிகாமல் இருக்குமாறு அமைக்கப்பட வேண்டும்.

(3) வேளாண் பணிகளில் பணிபுரியும் பணியாளர் என்னும் நேர்வில், துணை விதிகள் (1) மற்றும் (2)இன் விதிக்கூறுகள்,அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் மாற்றங்களுக்கு உட்பட்டவையாகும்.

(4) இந்த விதியில் உள்ள எவையும் மத்திய 2020 ஆம் ஆண்டு தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பினை (மத்தியச் சட்டம் 37/2020) அல்லது அச்சட்டத் தொகுப்பின் கீழ் அமைக்கப்படும் விதிக்கூறுகளை பாதிப்பதாகக் கருதப்படக்கூடாது.

**7. வாராந்திர ஓய்வு நாள்.** (1) இவ்விதிகளின் விதிக்கூறுகளுக்கு உட்பட்டு, பணியாளர் ஒருவருக்கு ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் ஓய்வு அனுமதிக்கப்படும் (இங்கு இனிமேல் "ஓய்வு நாள்" என்று குறிப்பிடப்படும்), அது பொதுவாக ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும், எனினும் வேலையளிப்பவர், யாதொரு பணியாளருக்கும் அல்லது எந்தவகை பணியாளர்களுக்கும் வாரத்தின் வேறு யாதொரு நாளினையும் ஓய்வு நாளாக நிர்ணயிக்கலாம்.

இருப்பினும், பணியாளர் ஒருவர், தொடர்ச்சியான ஆறு நாட்களுக்குக் குறையாத காலத்திற்கு ஒரே வேலையளிப்பவரின் கீழ் பணிபுரிந்திருக்கும் நேர்வில், இந்தத் துணை விதியின் கீழ் ஓய்வு நாளைப் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆவார்:

இருப்பினும், மேலும், ஓய்வு நாளாக நிர்ணயிக்கப்படும் நாள் குறித்தும், மேற்சொன்ன ஓய்வு நாள் தொடர்பாக அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் யாதொரு மாற்றம் குறித்தும், அத்தகைய மாற்றம் செயலுக்கு வரும் முன்னர், இதுதொடர்பாக, பணியிடத்தில் ஆய்வாளர்– மற்றும்– உதவுபவரால் சுட்டிக் காட்டப்படும் இடத்தில் அதுகுறித்த அறிவிப்பு ஒன்றைக் காட்சிப்படுத்துவது மூலமோ அல்லது மேற்சொன்ன நிறுவனத்தின் வலைத்தளத்தில் வெளியிடுவதன் வாயிலாகப் பணியாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

**விளக்கம்.** மேற்சொன்ன துணை விதியின் முதலாம் வரம்பு நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள, ஆறு நாட்களுக்குக் குறையாத தொடர்ச்சியான பணிக்காலத்தினைக் கணக்கிடும் நோக்கத்திற்காக, பணியாளர் பணிக்குச் செல்லவேண்டிய, ஆனால் வருகைப்படி மட்டுமே வழங்கப்பட்டு, பணிவழங்கப்படாத யாதொருநாள், அல்லது 2020 ஆம் ஆண்டு தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பின் (மத்தியச்சட்டம்35/2020) கீழ் இழப்பீடு வழங்கப்பட்டு, பணியாளர் ஒருவர் பணிபுரிவதிலிருந்து நிறுத்தி வைக்கப்படும் (layoff) நாள் மற்றும் மேற்சொன்ன ஓய்வுநாளிற்கு முந்தைய ஆறு நாட்கள் காலத்தில் வேலையளிப்பவரால் பணியாளருக்கு வழங்கப்படும் ஊதியத்துடனான அல்லது ஊதியம் அல்லாதயாதொரு விடுப்பு அல்லது விடுமுறைநாள் ஆகியவை பணியாளர் பணிபுரிந்துள்ள நாட்களாகக் கருதப்பட வேண்டும்.

(2) யாதொரு அத்தகைய பணியாளரும், ஓய்வு நாளிற்கு முன்னர் அல்லது பின்னர் தொடர்ந்து வருகின்ற ஐந்து நாட்களில் ஏதேனும் ஒரு முழுநாளினை மாற்று ஓய்வு நாளாகக் கொண்டிருத்தல் அல்லது கொள்வதாக இருத்தல் தவிர, மேற்சொன்ன ஓய்வுநாளில் பணிபுரிய கோரப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ கூடாது: இருப்பினும், ஒருமுழு நாள் ஓய்வுநாளாக இல்லாமல், அடுத்தடுத்து பத்து நாட்களுக்கு மிகையாகப் பணியாளர் பணிபுரியும் வகையில் மாற்றுப்பணி அமைக்கப்படக் கூடாது.

(3) இவ்விதியின் முந்தைய விதிக்கூறுகளின்படி பணியாளர் ஒருவர், ஓய்வுநாளில் பணிபுரிந்து, அதற்கு மாற்றாக, அதன்முன் அல்லது பின்வரும் ஐந்து நாட்களில் மாற்று ஓய்வுநாள் அவருக்கு அளிக்கப்பட்டிருப்பின், வாரப்பணி நேரத்தைக் கணக்கிடும்போது, மாற்று ஓய்வுநாள் அமைகின்ற அந்த வாரத்தில் மேற்சொன்ன ஓய்வுநாள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) பணியாளர் ஒருவருக்குப் பின்வருபவை அளிக்கப்பட வேண்டும்–

(a) ஓய்வுநாளிற்கான ஊதியம், அதற்கு முந்தைய நாளின் வீதத்தில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்; மற்றும்

(b) அவர் ஓய்வுநாளில் பணிபுரிந்து, அவருக்கு மாற்று ஓய்வுநாள் வழங்கப்பட்டுள்ள நேர்வில், மாற்று ஓய்வுநாளிற்கு முந்தைய நாளிற்குப் பொருந்தும் வீதத்தில், அவர் பணிபுரிந்த ஓய்வுநாளிற்கான ஊதியமாக, மிகை நேரவீதம் மற்றும் ஊதியம் வழங்கப்படும்.

இருப்பினும் –

(i) சட்டத் தொகுப்பின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதிய வீதமானது, குறைந்தளவு மாதாந்திர ஊதிய வீதத்தினை இருபத்து ஆறால் வகுத்துக் கணக்கிடப்பட்டிருக்கும் நேர்வில்; அல்லது

(ii) பணியாளரின் உள்ளபடியான நாள் ஊதிய வீதமானது, மாதாந்திர ஊதிய வீதத்தினை இருபத்து ஆறால் வகுத்துக் கணக்கிடப்பட்டு, அத்தகைய உள்ளபடியான நாள் ஊதிய வீதமானது பணியாளரின் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள குறைந்தளவு நாள் ஊதிய வீதத்தைக் காட்டிலும் குறைவாக இல்லாத நேர்வில், ஓய்வுநாளிற்கு யாதொரு ஊதியமும் வழங்கத் தேவையில்லை மேலும்

(iii) பணியாளர் ஓய்வு நாளில் பணிபுரிந்து, அவருக்கு மாற்று ஓய்வுநாள் அளிக்கப்பட்டிருப்பின், அவர் பணிபுரிந்த ஓய்வு நாளிற்கு மட்டும், மிகை நேரவீதத்தில் அவருக்கு வழங்கத்தக்க ஊதியத்திற்கு இணையான தொகை வழங்கப்பட வேண்டும்; மேலும்

(iv) இந்த வரம்பு நிபந்தனையின் விதிக்கூறுகளின்படி நாள் ஊதியவீதம் கணக்கிடப்பட்டுள்ளதா என யாதொரு ஐயமும் ஏற்படும் நேர்வில், தொழிலாளர் ஆணையர் அல்லது தொடர்புடைய அதிகார வரம்பிற்கான தொழிலாளர் இணை ஆணையர், இது தொடர்பாக அவருக்கு அளிக்கப்படும் விண்ணப்பத்தின் பேரில், தொடர்புடைய தரப்பினர்களுக்கு எழுத்து வடிவிலான முறையீடு அளிப்பதற்கு வாய்ப்பளித்த பின்னர் அது குறித்து முடிவெடுக்கலாம்:

இருப்பினும், மேலும் பணியாளர் எண்ணிக்கை அடிப்படையில் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறும் முறையில்பணி செய்யும் நேர்வில், மேற்சொன்ன வேலைவாய்ப்பு தொடர்பான இச்சட்டத் தொகுப்பின்கீழ் அவ்வப்போது அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஊதிய வீதத்தினைச் சரிபார்த்து, நேர்விற்கேற்ப ஓய்வுநாள் அல்லது மாற்று ஓய்வு நாளிற்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**விளக்கம்** – இந்தத் துணைவிதியில் 'முந்தைய நாள்' என்பது நேர்விற்கேற்ப, ஓய்வு நாளிற்கு அல்லது மாற்று ஓய்வு நாளிற்கு முன் பணியாளர் பணிபுரிந்த இறுதி நாள் எனப் பொருள்படும்; மேலும், மாற்று ஓய்வு நாளானது ஓய்வு நாளிற்கு அடுத்த நாளாக வரும் நேர்வில், முந்தைய நாள் என்பது, மேற்சொன்ன பணியாளர் ஓய்வு நாளிற்கு முன் பணிபுரிந்துள்ள இறுதி நாள் எனப் பொருள்படும்.

(5) பணியாளர் ஒருவருக்கு, ஏனைய யாதொரு சட்டத்தின்கீழ் அல்லது யாதொரு தீர்வம், ஒப்பந்தம் அல்லது பணி உடன்படிக்கையின் விதிமுறைகளுக்குக்கீழ் ஏதேனும் தனிச்சலுகைகள் பெறத் தகுதியுடையவராக உள்ள நேர்வில், இவ்விதியின் விதிக்கூறுகள் பொருந்தாது, மேலும் அத்தகைய நேர்வில், பணியாளர், மேற்சொன்ன அதிகப்படியான தனிச்சலுகைகள் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

**விளக்கம்** – இவ்விதியின் நோக்கத்திற்காக, 'வாரம்' என்பது சனிக்கிழமை இரவில் வருகின்ற நள்ளிரவு தொடங்கி வருகிற ஏழுநாட்கள் கால அளவைக் குறிக்கும்.

**8. இரவுப்பணி:–** ஒரு பணியில் பணியாளர் ஒருவர் நள்ளிரவைக் கடந்து நீளுகின்ற கால நேரத்தில் பணிபுரியும் நேர்வில், –

(a) இந்நேர்வில் விதி 7 இன் நோக்கங்களுக்காக, ஒரு முழு ஓய்வு நாள் என்பது, அவரது பணி முறைமாற்றம் (ஷிப்ட்) முடிவடைகிற நேரம் தொடங்கி, அதனைத் தொடர்ந்து வரும் இருபத்து நான்கு மணி நேரங்கள் உள்ள காலம் எனப் பொருள்படும்; மேலும்

(b) அத்தகைய நேர்வில், அடுத்த நாளானது, அத்தகைய பணி முறை மாற்றம் முடிவடைகிற நேரம் தொடங்கி, அதனைத் தொடர்ந்து வரும் இருபத்து நான்கு மணி நேரங்கள் காலமாகக் கருதப்பட வேண்டும், மேலும் அத்தகைய பணியாளர் பணியில் ஈடுபட்டுள்ள காலமானது, நள்ளிரவைக் கடந்து செல்கிற நேர்வில், முந்தைய நாளுடன் கணக்கிடப்பட வேண்டும்.

**9. 13 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் நோக்கங்களுக்கான வரம்பு மற்றும் நிபந்தனைகள்:–** பின்வரும் நேர்வுகளில் பணியாளர்கள் –

(a) முன்னரே கணித்திருக்க இயலாத அல்லது தவிர்க்கத்திருக்க இயலாதயாதொரு அவசரப் பணியில் பணிபுரியும் நேர்வில்;

(b) தொடர்புடைய பணியில் பொதுவாக வரையறுக்கப்பட்டுள்ள பணிநேர வரம்பிற்கு வெளியே கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப்பணிகள் அல்லது கூடுதல் பணிகள் போன்றவற்றில் பணியாளர் பணிபுரியும் நேர்வில்;

(c) இடைவெளிவிட்டு பணிபுரிவது அவசியம் என்னும் நேர்வில்;

(d) தொழில்நுட்பக் காரணங்களுக்காக, பணிநேரம் நிறைவடைவதற்கு முன்னரே முடிக்கப்படவேண்டிய யாதொரு பணியிலும் ஈடுபட்டுள்ள நேர்வில்;

(e) எதிர்பாராத இயற்கைச் சீற்றங்கள் காரணமாக அச்சமயங்களில் மட்டுமே மேற்கொள்ளத்தக்க பணி ஒன்றில் ஈடுபட்டுள்ள நேர்வில்;

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு 6, 7 மற்றும் 8 ஆம் விதிகளைச் சேர்ந்த விதிக்கூறுகள் பொருந்தும்–

(i) யாதொரு நாளிலும் பணியாளரின் பணிநேரப் பரவல் 14 மணிநேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்; மற்றும்

(ii) ஓய்வு இடைவேளைகள் மற்றும் பணியாளர் பணியிலிருந்தும் பணிக்கு அல்லது வருகைப் பதிவிற்கு அழைக்கப்படாமல் செயலற்றிருக்கும் காலங்கள் ஆகியவை நீங்கலாக உள்ள உள்ளபடியான பணி நேரம், யாதொரு நாளிலும் 9 மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**10. நீண்ட ஊதியக் காலம்:–** 14 ஆம் பிரிவின் கீழ் குறைந்தபட்ச ஊதிய நோக்கங்களுக்காக நீண்ட ஊதியக் காலம் என்பது ஒருமாத காலமாகும்.

**11. வழக்கமான பணி நாளுக்குக் குறைவாகப் பணிபுரியும் பணியாளரின் ஊதியம்:–** பணியாளர் ஒருவர், தொடர்புடைய காலத்தில் செயலிலுள்ள ஏனைய யாதொரு சட்டத்தின்கீழும் ஊதியம் பெறுவதற்கு தகுதியற்றவராக உள்ள நேர்வில், 10 ஆம் பிரிவின் கீழ், ஒரு முழு வழக்கமான பணி நாளிற்கான ஊதியத்தைப் பெறுவதற்கும் அவர் தகுதியற்றவர்ஆவார்.

## அத்தியாயம் – III

## ஊதியங்கள் வழங்கல்

**12. 18 ஆம் பிரிவைச் சேர்ந்த 2–ஆம் உட்பிரிவின் (f) பகுதியின் (ii) உட்பகுதியின் கீழ் பிடித்தம்:–** தொழிலாளர்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள யாதொரு நிதியிலிருந்தும் அரசால் நிர்ணயிக்கப்படுகிறவாறு வழங்கப்படுகின்ற கடன் தொகையும், மற்றும் அத்தகைய கடன் தொடர்பாகச் செலுத்தத்தக்க வட்டித் தொகையும் இருபத்து நான்கு மாதங்களுக்கு மிகாத காலத்திற்குள் ஊதியத்திலிருந்து தவணைகளாகப் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

**13. 18 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ்** தொகை மீட்டல்–18 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்படுகிற மொத்த பிடித்தங்கள் பணியாளரின் ஐம்பது சதவீத ஊதியத்திற்கு மிகுதியாக உள்ள நேர்வில், மேற்சொன்ன மிகைத் தொகையானது, பின்னர் எடுத்தெழுதப்பட்டு, நேர்விற்கேற்ப அதனையடுத்த ஊதியக் காலம் அல்லது ஊதியக் காலங்களிலிருந்து, யாதொரு மாதத்திலும், பணியாளரின் அந்த மாத ஊதியத்தில் ஐம்பது சதவீதத்திற்கு மிகாத வகையில், அத்தகைய தவணைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

**14. 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அதிகாரி:** பணியாளரின் பணியிடத்தினை அதிகார வரம்பாகக் கொண்டுள்ள தொழிலாளர் இணை ஆணையர், 19 பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் நோக்கத்திற்கான அதிகாரி ஆவார்.

**15. 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடும் முறை.–** 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பானது, பணியிட வளாகங்களில் நன்கு தெரிகிற இடங்களில் வட்டார மொழி மற்றும் ஆங்கில மொழியில் காட்சிப்படுத்தப்பட வேண்டும், தொடர்புடைய ஒவ்வொரு பணியாளரும் மேற்சொன்ன அறிக்கையின் உள்ளடக்கத்தை எளிதாகப் படிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும், மேலும் மேற்சொன்ன அறிக்கையின் நகல் ஒன்று, சம்பந்தப்பட்ட ஆய்வாளர் மற்றும் உதவுபவருக்கு அனுப்பப்பட வேண்டும். மேற்சொன்ன அறிக்கையை நிறுவனத்தின் வலைத்தளத்திலும் வெளியிட வேண்டும்.

**16. 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) –ஆம் உட்பிரிவின் கீழ் நடைமுறை:–** 14 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரியிடம், அபராதம் விதிப்பதற்கு ஒப்புதல் பெறுவதற்காக,வேலையளிப்பவர் எழுத்துவடிவில் அல்லது மின்னணு முறையில், அதற்கான விரிவான விவரங்களைக் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்ப வேண்டும். மேற்சொன்ன அதிகாரி, ஒப்புதல் அளிப்பதற்கு அல்லது மறுப்பதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட பணியாளர் மற்றும் வேலையளிப்பவருக்கு அவர்களின் கருத்தைக் கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

**17. 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (8)–ஆம் உட்பிரிவின் கீழ் அபராதம் மற்றும் வசூல் குறித்துப் பதிவு செய்வதற்கான பதிவேட்டின்படிவம்:** (1) யாதொரு நேர்விலும், வேலையளிப்பவர் ஒருவர், அபாராதம் விதிக்கத்தக்க செயல்பாடுகள் மற்றும் விடுபாடுகள் தொடர்பாக, 19 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஒப்புதல் பெற்றுள்ள நேர்வில், மேற்சொன்ன வேலையளிப்பவர், அதனை மின்னணு முறையில் அல்லது இதரவகையில் படிவம் I–இல் அபராதப் பதிவேடு ஒன்றில் பராமரிக்க வேண்டும்.

**18. பிடித்தங்கள் குறித்து விவரம் தெரிவித்தல்:** (1) வேலையளிப்பவர் ஒருவர், 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்விதிக்கூறுகளுக்கிணங்க யாதொரு பிடித்தமும் மேற்கொள்கிற நேர்வில், அத்தகைய பிடித்தம் தொடர்பாக, மின்னணு முறையில் அல்லது ஏனைய முறையில், சம்பந்தப்பட்ட ஆய்வாளர் மற்றும் உதவுபவுருக்கு, அத்தகைய பிடித்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள், அத்தகைய பிடித்தத்திற்கான காரணத்தின் விளக்கத்துடன் தகவல் தெரிவிக்க வேண்டும்.

(2) மேற்சொன்ன ஆய்வாளர்மற்றும்உதவுபவர், துணைவிதி (1) இன் கீழ் அத்தகைய தகவலைப் பெற்ற பின்னர், அத்தகைய தகவலை ஆய்வுசெய்து, அதில் அளிக்கப்பட்டுள்ளவிளக்கம், இச்சட்டத் தொகுப்பு அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின் யாதொரு சட்டக்கூறுகளுக்கோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கோ முரணாக உள்ளதாக அவர் கண்டறியும் நேர்வில், இச்சட்டத் தொகுப்பின் கீழ், மேற்சொன்ன வேலையளிப்பவருக்கு எதிராக உரிய நடவடிக்கையைத் தொடங்க வேண்டும்.

**19. 21 ஆம் பிரிவைச் சேர்ந்த (2)–ஆம் உட்பிரிவின் கீழ் பிடித்தம் செய்வதற்கான நடைமுறை:** சேதங்கள் அல்லது இழப்புகள் தொடர்பாக, 21 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் பணியாளர் ஒருவரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்ய விரும்பும் யாதொரு வேலையளிப்பவரும்,–

(1) மேற்சொன்ன பணியாளரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட பொருள்களின் சேதம் அல்லது இழப்பு, அல்லது அவர் பதிலளிக்கத்தக்க பண இழப்பு குறித்தும், மேற்சொன்ன பணியாளரின் அலட்சியப் போக்கு அல்லது தவறுதல் காரணமாக, எவ்வாறு அத்தகைய சேதங்களும் இழப்பும்ஏ ஏற்படக் காரணமாக இருந்தது என்பது குறித்தும் நேரிலும், எழுத்து வடிவிலும் பணியாளரிடம் விளக்க வேண்டும்; மற்றும்

(2) அதன் பின்னர், பணியாளர் யாதொரு விளக்கமும் அளிக்க, அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, யாதொரு சேதம் அல்லது இழப்பு தொடர்பாக ஏதேனும் பிடித்தம் செய்யப்பட்ட நேர்வில், அத்தகைய பிடித்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மேற்சொன்ன பணியாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

**20. 21 ஆம் பிரிவைச் சேர்ந்த (3)–ஆம் உட்பிரிவின் கீழ், சேதம் அல்லது இழப்பு தொடர்பான அனைத்துப் பிடித்தங்கள் அல்லது வசூல் விவரங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேட்டின்** படிவம்:–சேதம் அல்லது இழப்பு தொடர்பாக, 21 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் பணியாளர் ஒருவரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்ய விரும்பும் யாதொரு வேலையளிப்பவரும், படிவம் I இல் பதிவேடு ஒன்றினைப் பராமரிக்க வேண்டும்.

**21. 23 ஆம் பிரிவின் கீழ் முன்பணத்தை வசூலிப்பது தொடர்பான நிபந்தனைகள்:—**

(i) பணி தொடங்கிய பின்னர், பணியாளர் ஒருவருக்கு 23 ஆம் பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின் கீழ் முன்பணம் வழங்குதல்; அல்லது

(ii) பணியாளர் ஒருவருக்கு, முன்னரே ஈட்டப்படாத நிலையில் ஊதிய முன்பணம் வழங்குதல்;

ஆகிய நேர்வுகளில், சம்பந்தப்பட்ட பணியாளரின் ஊதியத்திலிருந்து, வேலையளிப்பவரால் நிர்ணயிக்கப்படும் தவணைகளில், ஒரு ஊதியக் காலத்தில் யாதொரு தவணையும் அல்லது அனைத்துத் தவணைகளும், அந்த ஊதியக் காலத்தில், மேற்சொன்ன பணியாளரின் ஊதியத்தில் ஐம்பது சதவீதத்தை மிகாமல் இருக்குமாறு வசூலிக்கப்பட வேண்டும், மேலும் அத்தகைய வசூல் தொடர்பான விவரங்கள் **படிவம்-I** இல் பராமரிக்கப்படும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**22. 24 ஆம் பிரிவின் கீழ் பிடித்தம்:—** வீடு கட்டுதல் அல்லது அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏனைய நோக்கங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைகளையும், அவற்றுக்கான வட்டித் தொகையையும் வசூலிப்பதற்கான பிடித்தங்கள், அத்தகைய கடன் தொகைகள் வழங்கப்படத்தக்க அளவு மற்றும் அவற்றுக்குச் செலுத்தத்தக்க வட்டி வீதம் ஆகியவற்றை முறைப்படுத்தி, அவ்வப்போது அரசால் அளிக்கப்படும் யாதொரு உத்தரவிற்கு அல்லது வெளியிடப்படும் சுற்றறிக்கைக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

## அத்தியாயம்—IV

## மாநில ஆலோசனை வாரியம்

23. **வாரிய அமைப்பு:—(1)** வாரியம், குழு மற்றும் துணைக்குழு ஆகியவை 42ஆம் பிரிவைச் சேர்ந்த **(6)—**ஆம்உட்பிரிவின் (a) மற்றும் (b) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளமுறையில் வேலையளிப்பவர் மற்றும் பணியாளர்களின் சார்பாக அரசால் முன்மொழியப்பட வேண்டிய நபர்களையும் 42ஆம் பிரிவைச் சேர்ந்த **(6)—**ஆம்உட்பிரிவின் (c) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தனிப்பட்ட நபர்களையும் கொண்டிருக்க வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 42ஆம் பிரிவைச் சேர்ந்த **(6)—**ஆம்உட்பிரிவின் பகுதி (a)—இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேலையளிப்பவர்களின் சார்பாக எட்டு நபர்களும் அந்த உட்பிரிவின் (b) பகுதியில் குறிப்பிடபட்டுள்ள பணியாளர்களின் சார்பாக எட்டு நபர்களும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(3) அரசால் முன்மொழியப்பட / நியமிக்கப்பட வேண்டிய 42ஆம் பிரிவைச் சேர்ந்த **(6)** உட்பிரிவின் (c) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட நபர்கள் பின்வருபவர்களாவர். அதாவது:—

(i) தலைவர் (அலுவல் வழி), மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்;

(ii) இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள்;

(iii) ஊதியம் மற்றும் தொழிலாளர் சார்ந்த பிரச்சனைகளைக் கையாளுகிற துறையிலுள்ள நிபுணத்துவம் வாய்ந்த இரண்டு உறுப்பினர்கள்;

1947ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 7A ஆம் பிரிவின் கீழ் அல்லது நேர்விற்கேற்ப, 2020ஆம் ஆண்டு தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பின் (மத்தியச் சட்டம் 35/2020) 44ஆம் பிரிவின் கீழ் அரசால் அமைக்கப்பட்ட தொழிற் தீர்ப்பாயத்தில் தலைமை அலுவலராக உள்ள அல்லது ஏற்கனவே அவ்வாறு இருந்த ஒரு உறுப்பினர்.

**24. வாரியக் கூட்டம்: தலைவர்,** விதி 25—ல் உள்ள விதிக்கூறுகளுக்குட்பட்டு, அவர் பொருத்தமானதாக நினைக்கும் எந்த ஒரு நேரத்திலும் வாரிய கூட்டத்தைக் கூட்டலாம்.

ஆனால், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிக்கும் குறையாத உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற எழுத்துவடிவ கோரிக்கையின்பேரில், அத்தகைய கோரிக்கை வரப்பெற்ற நாளிலிருந்து முப்பதுநாட்களுக்குள் வாரியத்தலைவர் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்

**25. கூட்டங்கள் குறித்த அறிவிப்பு:** ஒவ்வொரு கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து தலைவர் முடிவு செய்ய வேண்டும். மேலும், அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் பட்டியலுடன் மேற்சொன்ன விவரங்களையும் உள்ளடக்கிய எழுத்து வடிவிலான அறிவிப்பு அத்தகைய கூட்டம் நடைபெறக்கூடிய நாளுக்கு குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னர் பதிவு அஞ்சல் வாயிலாகவும் மின்னணு தகவல் தொடர்பு முறை வாயிலாகவும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்பப்பட வேண்டும்.

ஆனால், அவசர கூட்டம் குறித்த நேர்வில், ஏழு நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பை வழங்கினால் போதுமானதாகும்.

**26. தலைவரின் பணிகள்: தலைவர்—**

(i) வாரியக் கூட்டங்களுக்கு தலைமை வகிக்க வேண்டும்;

ஆனால், ஏதேனும் கூட்டத்திற்கு தலைவர் வர இயலாதபோது, அந்த கூட்டத்திற்கு உறுப்பினர்கள் தங்களுக்குள் இருந்து பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபர் தலைமை வகிக்க வேண்டும்.

(ii) வாரியத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலையும் தீர்மானிக்க வேண்டும்;

(iii) வாரியக் கூட்டத்தில் வாக்கெடுப்பின் வாயிலாக ஏதேனும் ஒரு விவாதப்பொருள் குறித்து தீர்வு செய்யப்பட வேண்டியிருப்பின், வாக்கெடுப்பு நடத்தி வாக்குகளை எண்ண வேண்டும் அல்லது ரகசிய வாக்கெடுப்பு நடத்தி வாக்குகளை எண்ண வேண்டும்.

**27. கூட்டம் நடத்துவதற்கான குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை:** குறைந்தளவு மூன்றில் ஒரு பங்குஉறுப்பினர் மற்றும் அவர்களின் வேலையளிப்போர் தரப்பிலும் கட்டாயம் குறைந்தளாவு ஒரு நபர் மற்றும் பணியாளர் தரப்பில் கட்டாயம் குறைந்தளவு ஒரு நபர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையெனில் யாதொரு கூட்டத்திலும் எத்தகைய பணியும் மேற்கொள்ளப்பட கூடாது.

இருப்பினும், ஏதேனும் ஒரு கூட்டத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளார்களெனில், தலைவர் அக்கூட்டத்தை அன்றைய நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளான வேறுநாளுக்கு ஒத்திவைக்கலாம். மேலும், அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் எத்தனை உறுப்பினர்கள் கலந்து கொண்டாலும் அக்கூட்டத்தை நடத்துவது சட்டரீதியானதாகும்.

மேலும், ஆனால் அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் ஆகியவை குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறைத்தகவல் மற்றும் பதிவு அஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

**28. வாரியத்தின் செயல்பாடுகளை செய்து முடித்தல்.–** வாரியம், குழு, துணைக்குழு ஆகியவற்றின் அனைத்து செயல்பாடுகளும் அங்குள்ள உறுப்பினர்கள்களின் பெரும்பான்மையிலான வாக்குகளைக் கொண்டும் வாக்கெடுப்பின் வாயிலாகவும் முடிவு செய்யப்பட வேண்டும். சம வாக்குகள் உள்ள நேர்வில், தலைவர் வாக்களிக்க வேண்டும்.

ஆனால், தலைவர் பொருத்தமானதென கருதினால், தேவையான ஆவணங்களை சுற்றோட்டம் அனுப்பி உறுப்பினர்களின் எழுத்துவடிவிலான கருத்துகளைப் பெறுவதன் வாயிலாகயாதொரு விவகாரம் குறித்தும் தீர்மானிக்க அறிவுறுத்தலாம்.

ஆனால், மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கும் குறைவில்லாத உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டாலன்றி, முந்தைய விதிக்கூறுகளின் கீழ்யாதொரு விவாதப்பொருள் குறித்தும் முடிவெடுக்கப்படகூடாது.

**29. வாக்களிக்கும் முறை:–** பொதுவாகக் கைகளை உயர்த்திக் காட்டுவதன் வாயிலாக வாரியத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஆனால், ஏதேனும் உறுப்பினர் வாக்குச் சீட்டின் மூலமான வாக்குப்பதிவிற்குக் கோரினார் எனில், அல்லது அவ்வாறு வாக்குப்பதிவு நடத்த வேண்டுமென்று தலைவர் முடிவு செய்தாரெனில், தலைவர் முடிவு செய்யும் விதத்தில் இரகசிய வாக்கு செலுத்தும் முறையிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

**30. கூட்ட நடவடிக்கைகள்:** (1) கூட்டம் நிறைவடைந்தவுடன் ஏனைய தகவல்களுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் பெயர்களையும் வாரியத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் செயற்பாடுகள் குறித்தும் இயன்றளவில் விரைவாகவும் யாதொரு நேர்விலும், அடுத்த கூட்டம் நடைபெறும் நாளுக்கு ஏழு நாட்கள் முன்னதாகவும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அரசுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு வாரியக் கூட்டத்தின் நடவடிக்கைகளும் அடுத்த கூட்டத்தில், பரிசீலிக்கப்பட்டு, அவசியமென கருதப்படத்தக்க மாற்றம் ஏதேனுமிருப்பின், அத்தகைய மாற்றத்தை மேற்கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**31. சாட்சிகளை வரவழைத்தல் மற்றும் ஆவணங்களை அளிக்க கோருதல்:** (1) தலைவர் தனது பணிகளை செய்யும்போது அதற்கு அவசியமானது என்றால் எவரையும் சாட்சியாக வரவழைத்து அவரிடம் தேவையான ஆவணங்களை அளிக்குமாறு கோரலாம்.

(2) வாரியத்திற்கு சாட்சியாக அழைக்கப்படும் மற்றும் சாட்சியாக தோன்றும் ஒவ்வொரு நபரும், அவரால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான படியாக, ஒரு உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சியாக வருபவருக்கு தற்போது அத்தகைய படிகள் எவ்வளவு வழங்கப்படுகின்றனவோ அதே அளவிலான படிகளைப் பெற்றுக்கொள்ள தகுதியுடையவராவார்.

## அத்தியாயம் – V

## வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலங்கள்

32. வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலம்: (1) 42 ஆம் பிரிவைச் சேர்ந்த (6)–ஆம் உட்பிரிவின் கீழ், நேர்விற்கேற்ப, தலைவர் உட்பட வாரியத்தின் தற்சார்பு உறுப்பினர்கள் அனைவரும் அரசு விரும்பும்வரை பதவி வகிக்கலாம்.

(2) வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர் ஒருவர், அரசிதழில் அவரது நியமனம் முதன்முதலாக வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்கு பதவி வகிக்கலாம்.

இருப்பினும், அத்தகைய உறுப்பினர், இரண்டு ஆண்டுகாலம் முடிந்திருந்தாலும், அடுத்த உறுப்பினர் புதிதாக நியமனம் செய்யப்படும் வரை தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும்.

(3) மேற்சொன்ன துணைவிதி (2)–ல் என்ன சொல்லியிருப்பினும், வாரியத்தின் அனைத்து அலுவல் சாரா உறுப்பினர்களும் அரசு விரும்பும் வரை உறுப்பினராக பதவி வகிக்கலாம்.

(4) ஒரு காலி இடத்தை நிரப்ப நியமனம் செய்யப்பட்ட ஆலோசனைக் குழுவின் தற்சார்பற்ற உறுப்பினர் ஒருவர் அத்தகைய காலிப்பணியிடம் உருவாகாமல் இருந்திருப்பின், அவருக்கு முன் அப்பதவியில் இருந்தவர் எவ்வளவு காலம் பதவியில் இருந்திருப்பாரோ அத்தகைய கால அளவிற்கு மட்டுமே அப்பதவியில் இருப்பார்

(5) அரசால் நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினரால், குழு அல்லது துணைக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லையெனில், அந்த உறுப்பினரை நியமனம் செய்த அரசு அல்லது அமைப்பானது, அதன் சார்பாக கையொப்பமிடப்பட்டு மேற்சொன்ன குழுவின் அல்லது துணைக்குழுவின் தலைவருக்கு எழுதப்பட்ட எழுத்து வடிவிலான அறிவிப்பு வாயிலாக அவருக்குப் பதிலாக வேறு ஒருநபரை அந்த கூட்டத்தில் கலந்துக்கொள்வதற்காக நியமனம் செய்யலாம். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட மாற்று உறுப்பினர் அக்கூட்டத்தில் கலந்துக்கொள்ளும் உறுப்பினர்களுக்கு உள்ள அனைத்து உரிமைகளையும் பெற்றிருப்பார். மேலும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட எந்த முடிவையும், மாற்று உறுப்பினரின் கருத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு என்பதால் செல்லுபடியாகாது என கூற இயலாது.

**33. பயணப்படி: வாரியம், குழு மற்றும் துணைக்குழுவின்** தலைவர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினரும், அரசின் முதல் நிலை குழுவிற்கு பொருந்தக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டும் அத்தகைய வீதத்திலும் அவரின் பணி தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் யாதொரு பயணத்திற்கான பயணப்படி மற்றும்தங்குமிடத்திற்குரிய கட்டணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**34.** அலுவலர் மற்றும் பணியாளர்: வாரிய செயல்பாடுகளுக்கு தேவை என அரசு கருதும் நேர்வில், தொழிலாளர் இணை ஆணையர் பதவித் தரத்திற்கு குறையாத செயலாளர் ஒருவரையும் வாரியத்தின் பணியாளர்களையும் நியமிக்கலாம்.

**35.** வாரிய உறுப்பினர்களை மறு நியமனம் செய்வதற்கான தகுதி: பதவிகாலம் முடிவடைந்த உறுப்பினர் ஒருவர் மீண்டும் மொத்தமாக இரண்டு முறைக்கு மிகாமல் வாரிய உறுப்பினராக மறு நியமனம் செய்யப்பட தகுதியுடையவர் ஆவார்.

**36.** தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள் பதவி விலகுதல்: (1) வாரியம்குழு அல்லது துணைக்குழுவின் உறுப்பினர் உரிய தலைவருக்கு எழுத்து வடிவிலான அறிவிப்பினை அறிவித்து உறுப்பினர் பதவியிலிருந்து விலகலாம், மற்றும் குழு அல்லது துணைக்குழுவின் தலைவர் வாரியத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் வாயிலாக பதவி விலகலாம்.

(2) ஒரு பதவி விலகலானது, அது ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்லிருந்து அல்லது பதவி விலகலை அறிவித்த நாளிலிருந்து 30 நாட்கள் நிறைவடையும் நாளன்று இவற்றில் எது முந்தையதோ அந்தநாளில் நடைமுறைக்கு வரும்.

(3) வாரியத்தின் உறுப்பினர் பதவியில் ஒரு காலியிடம் ஏற்பட்டாலோ அல்லது ஏற்பட வாய்ப்பிருந்தாலோ, அதன் தலைவர் உடனடியாக அரசுக்கு ஒரு அறிக்கையை அளிக்க வேண்டும். பின்னர், சட்டவிதிமுறைகளின்படி காலியிடத்தை நிரப்ப அரசுநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**37.** உறுப்பினர் நீக்கம்: (1) வாரியம், குழு அல்லது துணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர், தலைவரிடம் முன்னரே தெரிவிக்காமல், தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளத் தவறினால், அந்த உறுப்பினர் பொறுப்பில் இருந்து அவர் நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(2) துணை விதி(1) இன் கீழ் நீக்கம் செய்யப்பட்ட நபருக்கு, அத்தகைய நீக்கம் செய்யப்பட்ட நாளில் இருந்து, பதினைந்து நாட்களுக்குள் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் வாயிலாக அத்தகைய நீக்கம் குறித்து தகவல் அளிக்கப்பட வேண்டும். தனது உறுப்பினர் பதவி தனக்கு மீட்டளிக்கப்பட வேண்டுமென அவர் விரும்பினால், அத்தகைய கடிதம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவர் விண்ணப்பிக்கலாம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். உறுப்பினர் பதவியை மீண்டும் கோருவதற்கான விண்ணப்பம், குறிப்பிட்ட காலத்திற்குள் பெறப்பட்டால், நேர்விற்கேற்ப, குழு அல்லது வாரியத்திடம் அவ்விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும். தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாததற்கு அவர் தெரிவித்திருக்கும் காரணங்கள் போதுமானவை என அக்கூட்டத்தில் கலந்துக்கொண்ட உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் மனநிறைவடைந்தார்களெனில், அது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் அவருடைய உறுப்பினர் பதவி அவருக்கு திரும்ப அளிக்கப்பட வேண்டும்.

**38.** தகுதிநீக்கம். (1) வாரியம், குழு அல்லது துணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும் உறுப்பினராக இருப்பதற்கும் பின்வரும் நபருக்கு தகுதி கிடையாது:—

(i) தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவர் மனநிலை சரியில்லாதவர் என அறிவிக்கப்பட்டால்; அல்லது

(ii) அவர் நொடிப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்படாதிருந்தால்; அல்லது

(iii) இச்சட்டத்தொகுப்பு செயலுக்கு வருவதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்னரோ, அவர் ஒழுக்கநெறிமுறை தவறிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளாரெனில்,

(2) துணைவிதி (1)ன் கீழ் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதா என்று ஏதேனும் கேள்வி எழுந்தால், அது குறித்து அரசு எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

## அத்தியாயம் VI

## நிலுவைத் தொகை மற்றும் கேட்புத்தொகைகளை வழங்குதல்

**39. 44ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் தொகை வழங்குதல்.—** பணியாளர் இறந்த பிறகு அல்லது அவர் இருக்கும் இடம் தெரியாத காரணத்தால் இச்சட்டத்தொகுப்பின் கீழ் அப்பணியாளருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை நிலுவையாக இருந்து, அத்தகைய தொகை வழங்கப்பட வேண்டிய நாளிலிருந்து மூன்று மாதம் நிறைவடையும் வரையில் அப்பணியாளரின் நியமனதாரருக்கு அத்தொகைய வழங்க இயலவில்லையெனில், அந்த பணி அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட தொழிலாளர் இணை ஆணையரிடம் வேலையளிப்பவரால் அத்தகைய தொகை அளிக்கப்பட வேண்டும். அந்த இணை ஆணையர் அவ்வாறு அவரிடம் அத்தொகை வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத கால அளவிற்குள் அப்பணியாளரால் முன்மொழியப்பட்ட நபரின் அடையாளத்தை உறுதி செய்த பின்னர், அத்தொகையை அந்த நபரிடம் வழங்குவார்.

40. 44ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் வழங்கப்படாத நிலுவைத் தொகையை வைப்பீடு செய்தல்: (1)இச்சட்டத்தொகுப்பின் கீழ் பணியாளரால் நியமனதாரர் நியமிக்கப்படாமல் இருந்தலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ பணியாளருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ஏதேனும் வழங்கப்படாமல் இருப்பின், அத்தொகை வழங்கப்பட வேண்டிய நாளிலிருந்து ஆறுமாதங்கள் முடியும்வரை அத்தொகையினை பணியாளரின் நியமனதாரருக்கு செலுத்த வியலாது. அத்தொகைகள் அனைத்தும் பணி அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட தொழிலாளர் இணை ஆணையரிடம் வேலையளிப்பவரால் மேற்சொன்ன ஆறு மாதகாலத்தின் இறுதி நாளுக்குப் பின்னர் பதினைந்து நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் வைப்பீடு செய்யப்படவேண்டும்.

(2) துணை விதி (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது, வங்கிப் பரிமாற்றம் மூலமாகவோ அல்லதுஅத்தகைய தொழிலாளர் இணை ஆணையரின்பெயரில் இந்தியாவில் உள்ள யாதொரு அட்டவணைபடுத்தப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட குறுக்கு கோடிட்ட வரைவோலை வாயிலாகவோ வேலையளிப்பவரால் பணிஅதிகார வரம்பெல்லைக்குட்பட்ட தொழிலாளர் இணை ஆணையரிடம் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

**41.** 44ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் கொடுபடாத நிலுவைத் தொகைகளை கையாளும் முறை:– (1) பணி அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட தொழிலாளர் இணை ஆணையரிடம் வைப்பீடு செய்யப்பட்ட விதி 41–இன் துணை விதி (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது (இனிமேல் இந்த விதியில் தொகை என குறிப்பிடப்படுகிறது) அவரிடமே இருக்க வேண்டும் மற்றும் அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும் அல்லது நாட்டுடமையாக்கப்பட்ட அல்லது அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நிரந்தர வைப்புத்தொகையாக வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

